  

உ

சிவமயம்.

# திருத்தேங்கூர் தல வரலாறு.

எழுதியவர்:—

**ப. இராமநாத பிள்ளை**
தமிழாசிரியன்
**மன்னார்குடி.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 OCT 1951
MADRAS

★

வெளியிடுவோர்:—

**திருத்தேங்கூர் வெள்ளியங்கிரிநாத சுவாமி**
**தேவஸ்தான இறைபணியாளர்**
**வடிவேற் பிள்ளை.**

கர ஆண்டு, ஆனித் திங்கள், **15**-ம் நாள்.

உ

சிவமயம்.

# முன்னுரை.

நமச்சிவாய வாழ்க.

அன்புடையீர்!

சிவதலம் நிறைந்த சோழநாட்டிலே காவிரிக்குத் தென்பால் விளங்கும் தலங்களுள் திருத்தேங்கூர் ஒரு சிறந்த சிவதலமாகும். இது லட்சுமிதேவியால் பூசிக்கப்பெற்ற பெருமையுடையது. சுக்ரன், நவக்கோள்கள், அரிந்தமன் முதலானோராலும் வழிபடப் பெற்றது.

இத்தல வரலாறு ஒன்று ஆசிரியர் பெயரறிய முடியாததாய், தருமபுர ஆதீனவித்வானால் பரிசோதிக்கப் பெற்ற அழகிய செய்யுள் வடிவிலுள்ளதை யொட்டி இந்நூல் வெளியிடப்பட்டது.

அன்பர்கள் இதில் காணும் குற்றங்களைந்து குணம் பெய்து படித்துச் சிவகதையில் ஈடுபடுவார்கள் எனும் துணிவுபெற்றி கல்வியறிவால் குறைந்த அடியேன் எழுதத் துணிந்தமைக்கு மன்னித்தருளுவார்களாக.

இதை எழுதப்பணித்த இறைபணியாளர் திரு. வடிவேற் பிள்ளை அவர்கட்கு என் வணக்கம் உரியதாம். தோன்றாத்துணையாயிருந்து அருள் புரியும் பெரியநாயகி பாக வெள்ளியங்கிரிநாதர் திருவடிகளைப் போற்றுகிறேன்.

இவ்வண்ணம்,

**ப. இராமநாதன்,**

தமிழாசிரியன்.

 

உ

திருச்சிற்றம்பலம்.

## தல வினாயகர் துதி.

மருவேழும் புராசியெழு வரையேழும்
வலமயிலோன் வருமுன்னான்போம்
ஒருவேழந் தருபரனை யுமையைவலம்
வந்துகனி யுடன்கொண்டோனைப்
பெருவேழந் தீர்த்தன்பு தருமேரப்
பனைப்பசுந்தேன் பிலிற்றுத்தாற்றுங்
கருவேழ மருந்து துகிர்ச் செவ்வேழ
முகத்தானைக் கருத்துள் வைப்பாம்.

அன்புடையீர்!

பூவளர்சோலைப் புகழுடைக் காவிரி பாயும் சோழநாடு சிவதலம் நிறைந்தது. காவிரிக்குத் தென் கரையில் விளங்கும் தலங்கள் திருநெல்லிக்கா, திருக்கொள்ளிக்காடு, திருவெண்டுறை, திருநாட்டியத்தான்குடி, திருக்காறாயில், திருவலிவலம், திருக்கைச்சின்னம் முதலிய சிறந்த தலங்களின் நடுவில் விளங்குவது திருத்தேங்கூர் ஆகும். இது, சுக்கிரன், அரிந்தமன் முதலியவர்களால் பூசிக்கப் பெற்றது. சிறப்பாக லட்சுமிதேவியால் கைலாசசிகரத்தை நவக்கோள்கள் பூசிக்கப்பெற்றது. இத்தலம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் சிறந்து விளங்கும்.

## திருத்தேங்கூர் திருக்கோயில் அமைப்பு.

சோழநாட்டில், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் உள்ளது. திருவாரூர்-திருத்துறைப்பூண்டி. (ரயில் பாதையில்) திருநெல்லிக் காவலில் இறங்கி மட்சாலையில் ஒரு மைல் தொலைவில் உள்ளது.

சிவமூர்த்தியின் பெயர் — வெள்ளிமலைநாதர்
தேவியின் திருநாமம் — பெரியநாயகி
தீர்த்தம் — சிவகங்கை

ஆறு — வெண்ணாற்றின் கிளையாகப் பெட்டையாறு என வழங்கும் நதி, கோயிலுக்கு வடக்கே ஒன்றரை மைலில் மேற்கிலிருந்து கிழக்குநோக்கி ஓடும்.

### புராண வரலாறு.

சிவபெருமானது திருமுடியிலுள்ள கங்கை பாயும் பெருஞ் சிறப்புவாய்ந்த அறுபத்துநான்கு கட்டங்களை யுடைய காசித்தலத்தில் விசுவேசர் சந்நிதியில் உள்ள முத்தி மண்டபத்தில் சிவசமான முனிவராகிய அகத்தியர் உயர்ந்த ஆசனத்தில் எழுந்தருளியிருந்தார். அச் சபையில் இருந்த முனிவர்கள் அனைவரும் அவரது திருவடிகளை வணங்கித் தமக்குச் சிவதலங்களில் சிறந்த ஒரு தலத்தைப்பற்றி உரைத்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். அகத்திய முனிவர் மனமகிழ்ந்து இத் தலத்தின் பெருமையை உரைப்பாராயினர்.

எழ்தலம் புகழ் காவேரியால் விளை சோழ மண்டலத்தில் அக்காவிரியின் தென்கரையில் பற்பல

தலங்களுண்டு. அவற்றுள், திருக்காருயில், வலிவலம், திருக்கைச்சின்னம், திருநெல்லிக்கா, திருக்கொள்ளிக் காடு, கோட்டூர், திருநாட்டியத்தான்குடி முதலிய சிவதலங்களின் நடுநாயகமாய் விளங்குவது திருத் தேங்கூர் என்னும் தலமாம். இதன் பெருமை அளவிடற்கரியதாம். ஆயினும் சுருக்கிக் கூறுவோம்.

உலகமானது பல யுகங்களின் முடிவில் உண் டாகும் கற்பாந்த காலத்தில் கடலானது பொங்கி யெழ அதில் மாய்ந்து ஒழியும். அப்படி வந்த கற்பாந்த காலத்தில், இத்தலத்திலே மிகவும் விரும்பி எழுந்தருளி யிருக்கும் உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, உமது திருவிளையாடலால் இவ்வுலகம் அழிகிறதை யான் அறிவேன். ஆயினும் நமக்கு மிகவும் விருப்பமாயும், அடியார்களால் நிரம்பியுள்ளதுமான இந்தத் தலத்தை மட்டும் வெள்ளங்கொள்ளாமல் காத்தருள வேண்டும் என விண்ணப்பித்தார். சிவபெருமானும் மனமிரங்கி இத்தலத்தின் பெருமையை உலகமறியும்படி செய்தருள நினைத்து வெள்ளங்கொள்ளாமல் காத்தருளினர். இத் தலத்தில் கீழ்த்திசையில் கணபதியையும், மேற்றிசையில் முருகக்கடவுளையும், வடதிசையில் சண்டேசுரரையும், தென்திசையில் தெட்சணாமூர்த்தியையும் காவலாக அமர்த்தியருளினர். இதையறிந்த சித்தர்கள், ஞானிகள், பக்தர்கள், தேவர்கள் அடைக்கலமாக வந்தடைந்தனர். உலகமுழுதும் வெள்ளத்திலாழ்ந்தி அழிந்தது. இதை பிரமதேவரும், மகாவிஷ்ணுவும் கண்டு அதிசயித்து உமாதேவியையும், சிவபெருமானையும் துதித்து அருள் பெற்றனர்.

உலகம் கடல் நீரால் கொள்ளப்பட்டும், இத் தலத்தில் மட்டும் தெளிந்த நீர் தேங்கி நின்றதால் திருத்தேங்கூர் என்னும் காரணப்பெயரை இத்தலம் அடைத்தது. இத்தகைய தலத்தைத் தெரிசிப்பவர்கள் சர்வ சிவாலயங்களையும் தெரிசித்தவராவார்கள்.

## வெள்ளிமலைச் சுருக்கம்.

உலகத்தில் சிறந்த பொருள் மூன்று. அவை அறம், பொருள், இன்பம். இம் மூன்றையும் விட்டதே பேரின்ப வீடாகும். இவ்வுலகத்தில் பொருள் உடையவரே எல்லா நலன்களும் அடைவர். முதல் மூன்றில் நடுநாயகமாய் விளங்குவது பொருள். இதைப் பெற்றால் முதலில் உள்ள அறமும், பின்னையுள்ள இன்பமும் தானே வந்தடையும்.

இத்தகைய பொருளுக்கு அதிதேவதை லட்சுமி தேவியாகும். இத்தகையவள் ஒரு சமயம், தனது கடைக்கண் நோக்கம் பட்டவுடனே எத்தகையவருக்கும் செல்வம் பெருகும்படியான வரத்தைப் பெற விரும்பினாள். தனது கருத்து நிறைவேறுவதற்குப் பூவுலகம் சென்று சிவபெருமானைப் பூசித்து வர விடை பெற்று வைகுண்டத்தினின்றும் நீங்கினாள். கருமபூமியாகிய இவ்வுலகத்தை அடைந்து சிவபெருமானைப் பூசிக்கத்தக்க தலம் எதுவென்று ஆராய்ந்து இத்தலத்தை அடைந்தாள்.

இத்தலத்தில் கைலாயகிரியிலுள்ள ஆயிரத்தெட்டு கொடுமுடிகளில் ஒன்றைக் கொண்டுவந்து நிறுவிச் சிவ பூசை செய்ய வேணுமென்று நினைத்தாள். இத்தகைய

அருஞ்செயலைச் செய்ய கருடனை நினைத்தாள். உடனே கருடனும் வைகுண்டத்தினின்றும் வந்து அடிபணிந்து கட்டளையை எதிர்பார்த்து நின்றான். உடனே லட்சுமி தேவியும் தனது கருத்தைத் தெரிவிக்கவே கருடனும் வணங்கி விரைந்து பறந்து கைலாயத்தை அடைந்து நந்தி யெம்பெருமானை வழிபட்டு உத்தரவு பெற்று சிவ சந்நிதியை அடைந்து வணங்கித் துதித்து, லட்சுமி தேவியின் விண்ணப்பத்தைக் கூறி கொடுமுடி கொடுத் தருள வேண்டினர். சிவபெருமானும் ஒரு கொடு முடியை எடுத்துச்செல்ல வரமருளினர். கருடனும் கொடுமுடி ஒன்றைப் பிடுங்கி எடுத்து விரைந்து வந்து லட்சுமிதேவி முன் வைத்து வணங்கினன். தவத்தில் இருந்த லட்சுமிதேவியும் கண்விழித்துக் கைலையைத் தரிசித்துத் துதித்து மகிழ்ந்தனள். கருடனையும் வாழ்த்தி வைகுண்டஞ்சேரக் கட்டளையிட்டாள்.

லட்சுமிதேவி வெள்ளிமயமான அக் கொடு முடியைப் பூசித்து, உமாதேவி பாகரான சிவபெருமானை அதிலே பாவனை செய்து ஐந்தெழுத்து ஓதித் தவம் செய்தாள். சிவபெருமான் உமாதேவியுடன், முன்னே இருக்கும் வெள்ளிமலையில் கைலாயத்திலுள்ளபடி காட்சி தந்தருளினர். லட்சுமிதேவி கண்டு வணங்கித் துதித்துத் தம் கருத்து நிறைவேற வரம் தந்தருள வேண்டினள். சிவபெருமானும் அவ்வாறே வரம் தந்து மேலும் வேண்டிய வரங்களைக் கேட்கக்கடவாய் என்று திருவாய் மலர்ந்தருளினர். லட்சுமிதேவியும் இத்தலம் வெள்ளிமலையாகவும், உமாதேவியுடன் சிவ பெருமான் எக்காலமும் இருந்து வேண்டுவார்க்கு வேண்டுவரம் கொடுத்தருளவும் வேண்டினர். சிவ

பெருமானும் அப்படியே அருள்செய்தார். அது முதல் சுவாமியின் பெயர் "வெள்ளிமலைநாதர்" என வழங்குவதாயிற்று.

## சுக்கிரன் வழிபட்ட வரலாறு.

முன்னொரு காலத்தில் அசுரர்கட்கெல்லாம் தலைவனாய் மகாபலம் பொருந்தியவனாய் மாவலி என்றொரு சக்ரவர்த்தி மூவுலகத்தையும் தன்பலத்தால் வசப்படுத்தி ஆண்டுவந்தான். நாடு நகரங்களையிழந்த இந்திராதி தேவர்கள் பிரமனிடத்தில் முறையிட, பிரமதேவரும் இந்திராதியரும் வைகுண்டத்தையடைந்து முறையிட்டனர். மகாவிஷ்ணுவும் தாமே வாமனவதாரம் எடுத்து மாவலியையடக்கியருள்வதாய் வரங்கொடுத்தார். அப்படியே பெருமாளும் வாமனராய்ப் பிறந்து வளர்ந்தார். அப்போது மாவலி மேலும் உலகத்தை வெற்றிகொண்டு தமது குலப்பகைவர்களாகிய தேவர்களைத் தலையெடுக்காதபடி ஆண்டுவர நினைத்து ஒரு பெரிய யாகத்தைச் செய்தான். யாகத்தில் வருபவர்கட்கு இல்லையென்னாது தானம் செய்வது முறைமையாகும். இம்முறைப்படி யாவர்க்கும் நிறை செல்வம் வாய்ந்த மாவலி கொடிகட்டித்தானஞ் செய்து வரும் போது, வாமனரும் பிரமசாரிய வடிவத்துடன் அவன்பால் யாசிக்கச் சென்றார். வந்த பிரமசாரியை முறைப்படி வணங்கி மாவலி, யாது வேண்டுமெனக் கெட்டான். வாமனரோ தாமிருந்து தவஞ் செய்வதற்கு மூன்றடியளவு மண், பூதானஞ் செய்தாற் போதும் என்றிரந்தார். மாவலியும் தருவதாக வாக்களித்தான்.

அதுசமயம் மாவலியின் அருகிருந்த குலகுருவாகிய சுக்ரபகவான் மாவலியை நோக்கி, வந்திருப்பவர் மனிதனல்ல. மகாவிஷ்ணுவே இவ்வடிவத்தில் வந்திருக்கிறார். இதில் ஏதோ பெரிய கபடமிருக்கிறது. உன் வாக்

குப்படித் தானங் கொடாதே. உனக்கு ஆபத்து வரும் என்று கூறித்தடுத்தார். மாவலி மனங்கலங்காது, மகா விஷ்ணுவே என்னை வந்து யாசித்தால் அவருக்குத் தானங் கொடுத்தலைக் காட்டிலும் பெரிய பேறு என்ன இருக்கிறது. என்ன ஆபத்து வந்த போதிலும் என் வாக்கை மறுத்துத் தானமில்லையென்று கூறேன் என்று குருவுரைக்கு மறுவுரை பகர்ந்தார்.

மாவலி தான் கூறியபடி மூன்றடி மண் தானஞ் செய்து மகாவிஷ்ணு கையில் தாரை வார்த்தான். சுக்ரன் அப்படியிருந்தும் ஒரு வண்டுருவமெடுத்து தாரைவார்க்கும் கமண்டலத்தில் புகுந்து நீர் வராதபடி தடுத்தார். வாமனரோ தருப்பைப் புல்லால் நீர்த்தாரையிற்குத்தினர். நீர் வந்தது தானமும் ஏற்றார். சுக்ரனது ஒற்றைக்கண் குருடாயிற்று. வாமனரும் விசுவரூபங் கொண்டு மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகையளந்து மூன்றாமடியை மாவலி முடிமேல் வைத்தழுத்தினர்.

சுக்ரன் தனது சீடனைக்காப்பாற்ற நினைத்து "ஈவது விலக்கேல்" எனும் முதுமொழியை மறந்து மீறியதால் உண்டான அவமானந் தாங்காது ஒற்றைக்கண்ணோடு மறைவாகச் சிலகாலம் வசித்துவந்தார். தமது ஊனத்தைப் போக்கிக்கொள்ளவும் மகாவிஷ்ணுவின் பகையை மாற்றிக்கொள்ளவும் செய்யத்தக்கது சிவபூசையே என்று அறிந்து தெளிந்து அதற்கான சிவதலம் இத்திருத்தேங்கூரே என்று இங்குவந்து சேர்ந்தார்.

இங்கே விளங்கும் சிவகங்கையில் நீராடி நீறணிந்து, அக்கமணிந்து, சிவபெருமானைப் பத்தியோடு

பலகால் பூசித்தார். சிவபெருமான் உமையம்மையோடு காட்சி தந்து வரம் பல அருளினார். அவருடன் மற்றைய எட்டுக்ரகங்களும் சிவபூசை செய்து வரம்பல பெற்றன. நவக்ரகங்கள் ஒவ்வொன்றும் தம்தம் பெயரால் ஒவ்வொரு லிங்கம் நிறுவிப் பூசித்து வரலாயின. இந்த ஒன்பது சிவலிங்கங்களையும் நினைப்பவர், துதிப்பவர், பூசிப்பவர் நவக்ரகபீடைகளினின்றும் விலகிப் பெருவாழ்வு பெறுவர். இந்த லிங்கங்கள் நவக்ரகலிங்கங்கள் என்ற பெயருடன் இன்றும் விளங்குகின்றன.

## அரிந்தமன் வழிபட்ட வரலாறு.

ஐம்பத்தாறு தேசங்களிற் சிறந்த அங்கங்களோடு விளங்கிய அங்கதேசத்தை சோதன் என்னும் அரசன் அரசாண்டான். அவனுக்கு ஓர் குழந்தை பிறந்தது. அரசன் தனது அருமந்த ஆண்மகவின் சாதகத்தை கணிக்கச் செய்து, சிறந்த ஜோதிடர்கள் மூலம் பலனை ஆராய்ந்தான். சோதிடர்களோ யாவரும் குழந்தை நல்லயோக முடையவனல்ல வென்றும், நாடு நகரங்கள் யாவும் கைவிட்டு நீங்கும் என்றும் கூறினர். குழந்தையை, தம்மிடம் வைத்து வளர்க்காமல் கண்காணாத இடத்தில் விட்டுவிடுதல் நல்லதென்று முடிவு செய்து காட்டில் விட்டுவிடக் கட்டளையிட்டான்.

வேலையாட்களும் அப்படியே செய்தனர். நற்காலமாக அவ்வனத்தில் மிகுந்த அழுகோடு கிடந்து அழுத குழந்தையை விசுவாமித்திர முனிவரின் சீடர்கள் கண்டு மனமிரங்கி, அக்குழந்தையை எடுத்துக்கொண்டு தம் குருவினிடம் சென்று நடந்ததைக் கூறினர். அவரும் மனமிரங்கிக் குழந்தையைத் தம் ஆசிரமத்தில் வளர்த்து வந்தார். பல கலைகளிலும் வல்லவனாக்கினர்.

இக் குழந்தையின் சாதக பலன் மிகவும் தீதாக இருக்கிறதென்று ஆராய்ந்து அறிந்த முனிவர், நவக்ரக பீடைகளை அகற்றி, நல் வாழ்வளிக்கும் தலமாகிய திருத்தேங்கூரே என்று அறிந்தார். உடனே அக் குழந்தையிடம் அவன் வரலாற்றை அறிவித்து, அவனும் அவன் தந்தையுமாகிய அங்கதேசாதிபதி சோதனும் நவக்ரக பீடையால் வருந்துவதையும் அது தீர்ந்து நல் வாழ்வடைய, திருத்தேங்கூர் அடைந்து சிவகங்கையில் நீராடிச் சிவசின்னம் அணிந்து சிவபூசை செய்து, நவக்ரகலிங்கங்களை வழிபடக் கட்டளையிட்டார்.

அக் குழந்தையும், தாய்தந்தையும் குருவுமாய் விளங்கும் முனிவரை வணங்கி விடைபெற்று இத் தலத்தை அடைந்தான். விதிப்படி சிவபூஜை செய்து வெள்ளிமலைநாதரையும், நவக்ரகலிங்கங்களையும் தினமும் வழிபட்டான். சிவபெருமான் மனமகிழ்ந்து பாலன் முன் தோன்றி அருள் செய்து அங்கதேசஞ் சென்று முன் பிரிந்த தாய்தந்தையர்களைக் கண்டு மகிழ்ந்து நெடுங்காலம் அரசாளுவாய் எனத் திருவாய் மலர்ந்தருளினர். பாலனும் பன்முறை வணங்கி விடைபெற்று, தன் குருவிடம் வந்து வணங்கித் தான் அருள்பெற்று வந்ததை மகிழ்வுடன் கூறினன்.

விசுவாமித்திரரும் மகிழ்ந்து வாழ்த்தி அவனுக்கு வில், வேல், கதை, அம்பு நால் வகைச் சேனையும் கொடுத்து தன்னூர்க்குச் சென்று அவன் தந்தையை வென்று விரட்டி அரசாளும் அரசனை வென்று அரசாளு வாய் என வாழ்த்தி வரமருளினர். குழந்தையும் முனி வரையும் சீடர்களையும் வணங்கி வெள்ளிமலைநாதரை

மறவாத மனத்தனாய் அங்கதேசம் வந்தடைந்து அவ்வரசன் மேற் போர்தொடுத்தான். வெற்றி பெற்றான். உடனே தூதுவர்களைக்கொண்டு தாய் தந்தையாகிய சோதராஜனையும் தாயையும் தேடிக் கொண்டுவரச் செய்தான்.

தூதுவர்களும் மகிழ்ந்து தம் பழய அரசனையும் அரசியையும் கொண்டு வந்தனர். குழந்தையாகிய அரசன் அவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கி, தன் வரலாறு முழுதும் கூறவே, தாய் தந்தையர்கள் புளகமெழ மைந்தனைத் தழுவி, விசுவாமித்திரரையும், வெள்ளிமலைநாதரையும் வாழ்த்தி வணங்கினார்கள். பின்பு யாவரும் இத்தலத்தை அடைந்து திருக்கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்து திருவிழாக்களை நடத்தினார்கள். சித்திரை ரோகணியில் கொடியேற்றிப் பௌர்ணமியில் தீர்த்தவாரியும் செய்து மகிழ்ந்தனர்.

பின்னர் அரசன் அங்கதேசஞ் சென்று முடிசூட்டி முடிமன்னர் பலர் அடிவணங்க வெள்ளிமலைநாதரையே வணங்கி இன்புற்றான்.

## சிவகங்கை வழிபட்ட வரலாறு.

சிவபெருமான் சடையிலுள்ள பெருமையுடைய கங்காதேவி தினமும் தன்னிடத்தில் முழுகுவாரது பாபம் போக்கி வருபவள். இதனால் பாபம் அதிகரிக்கவே இதை நீக்கிக்கொள்ள நினைத்துப் பூவுலகிலுள்ள சகல தலங்களிலேயுமுள்ள தீர்த்தங்களில் முழுகிச் சிவபூசை செய்து வந்தாள். இப்படிப் பல நாளாகியும் பாவமுழுதும் போகவில்லை. நற்காலம் நண்ண ஒரு நாள் இத் திருத்தேங்கூரை அடைந்தாள். அடைந்த

113987

மாத்திரத்தில் அங்கம் புளகிக்க என்றுமில்லாத இன்பம் உண்டாகியது. கங்கையும் சிவனருள் பெருகிய தலம் இதுவே என்றுணர்ந்து தீர்த்தமாக சிவசின்னங்களுடன் ஐந்தெழுத்தோதி ஆலயஞ்சென்று பெரியநாயகியையும், வெள்ளிமலைநாதரையும் பூசித்து நவக்ரகலிங்கங்களையும் வழிபட்டாள். அதன் பக்கத்தில் ஒரு வாவி உண்டாக்கி செந்தாமரைப்பூக்களையும் உண்டாக்கிச் சிவனை வழிபட்டு செந்தாமரைப்பூவால் அருச்சித்தேத்தினள். சிவபெருமான் கங்கைக்கு காட்சிதந்து உனது பாபங்கள் ஒழிந்தது. இத் தீர்த்தத்தில் நீ நீங்காதிருப்பாயென்று திருவாய் மலர்ந்தருளினார்.

அது முதல், கங்காதேவிக்கும் பாபத்தைப் போக்கும் பெருமையுடைய தீர்த்தமாக விளங்கி வருகிறது. இதில் முழுகுவோர் நற்பேறடைவர்.

இத் தீர்த்தத்தில் அகலிகை தன் பாபம் கெடும்படியாக வந்து மூழ்கிச் சிவனருள் பெற்றாள். கௌதமரும் தம் பாபம் நீங்கப் பெற்றார். பீஷ்மர், துரோணர், துரியோதனாதியரைக் கொன்ற பஞ்ச பாண்டவர்கள் மூழ்கிப் பாபம் நீங்கிப் பெருவாழ்வு பெற்றனர்.

இத்தலத்தில் மாசிப் பௌர்ணமியோடு கூடிய திருவாதிரையில் சிவகங்கையில் நீராடி சிவபெருமானுக்கு அபிடேகாதி செய்து பூசித்தல் மிகச் சிறந்த பலனைக் கொடுத்தருளும். அமாவாசை, பௌர்ணமி, உத்தராயண, தெட்சணாயண, அர்த்தோதய, மகோதய புண்ணிய காலங்களில் முழுகி வழிபடுவோர் நலம் பல பெறுவர்.

# திருத்தேங்கூர்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

பண் பியந்தைக் காந்தாரம் (இரண்டாம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரைசெய் மால்கட னஞ்சை யுண்டவர் கருதலர் புரங்க
ளிரைசெய் தாரழ லூட்டி யுழல்பவ ரிடுபலிக் கெழில்சேர்
விரைசெய் பூம்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (1)

சித்தந் தன்னடி நினைவார் செடிபடு கொடுவினை தீர்க்குங்
கொத்தின் றாழ்சடை முடிமேற் கோளெயிற் றரவொடு பிறையன்
பத்தர் தாம்பணிந் தேத்தும் பரம்பரன் பைம்புனல் பதித்த
வித்தன் றாழ்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (2)

அடையும் வல்வினை யகல வருள்பவ ரனலுடை மழுவாட்
படையர் பாய்புலித் தோலர் பைம்புனற் கொன்றையர் படர்புன்
சடையில் வெண்பிறை சூடித் தார்மணி யணிதரு தறுகண்
விடையர் வீங்கெழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (3)

பண்டு நான்செய்த வினைகள் பறையவோர் நெறியருள் பயப்பார்
கொண்டல் வான்மதி சூடிக் குரைகடல் விடமணிக ண்டர்
வண்டு மாமல ரூதி மதுவுண விதழ்மறி வெய்தி
விண்ட வார்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (4)

சுழித்த வார்புனற் கங்கை சூடியொர் காலனைக் காலாற்
றெழித்து வானவர் நடுங்கச் செற்றவர் சிறையணி பறவை
கழித்த வெண்டலை யேந்திக் காமன துடல்பொடி யாக
விழித்த வர்திருத் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (5)

தொல்லை வல்வினை தீர்ப்பார் சுடலைவெண் பொடியணி சுவண்ட
ரெல்லி சூடிநின் றாடு மிறையவ ரிமையவ ரேத்தச்
சில்லை மால்விடை யேறித் திரிபுரந் தீயெழச் செற்ற
வில்லி னார்திருத் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (6)

நெறிகொள் சிந்தைய ராகி நினைபவர் வினைகெட நின்றார்
முறிகொண் மேனிமுக் கண்ணர் முளைமதி நடுநடுத் திலங்கப்
பொறிகொள் வாளர வணிந்த புண்ணியர் வெண்பொடிப் பூசி
வெறிகொள் பூம்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (7)

எண்ணி லாவிற லரக்க னெழிறிகழ் மால்வரை யெடுக்கக்
கண்ணெ லாம்பொடிந் தலறக் கால்விர லூன்றிய கருத்தர்
தண்ணு லாம்புனற் கண்ணி தயங்கிய சடைமுடிச் சதுரர்
விண்ணு லாம்பொழிற் றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (8)

தேடித் தானயன் மாலுந் திருமுடி யடியிணை காணார்
பாடத் தான்பல பூதப் படையினர் சுடலையிற் பலகா
லாடத் தான்மிக வல்ல ரருச்சுனற் கருள்செயக் கருதும்
வேடத் தார்திருத் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (9)

சடங்கொள் சீவரப் போர்வைச் சாக்கியர் சமணர்சொற் றவிர
விடங்கொள் வல்வினை தீர்க்கு மேத்துமி னிருமருப் பொருகைக்
கடங்கொண் மால்களிற் றுரியர் கடல்கடைந் திடக்கனன் றெழுந்த
விடங்கொள் கண்டத்தர் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரே.(10)

வெந்த நீற்றினர் தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரைக்
கந்த மார்பொழில் சூழ்ந்த காழியுண் ஞானசம் பந்தன்
சந்த மாயின பாடற் றண்டமிழ் பத்தும்வல் லார்மேற்
பந்த மாயின பாவம் பாறுத றேறுதல் பயனே. (11)

திருச்சிற்றம்பலம்.

சுவாமி திருநாமம்:- **வெள்ளிமலை நாதர்**

தேவி திருநாமம்:- **பெரியநாயகி**

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## திருக்ஷேத்திரக்கோவை.

பண் இந்தளம் (இரண்டாம் திருமுறை)

கோயிற்றிறம்.

**திருச்சிற்றம்பலம்.**

*ஆறை வட மாகற லம்ப ரையா*
*றணியர் பெருவேளூர் விளமர் **தேங்கூர்***
*சேறை துலைபுக லூரக லாதிவை*
*காதலித் தானவன் சேர் பதியே.* (5)

---

## திருநாவுக்கரசு நாயனார், திருக்ஷேத்திரக் கோவை.

திருத்தாண்டகம் (ஆறாம் திருமுறை)

கோயிற்றிறம்.

**திருச்சிற்றம்பலம்.**

*தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன்பள்ளி*
*தேவன் குடிசிராப் பள்ளி **தேங்கூர்***
*கொல்லிக் குளிரைப் பள்ளி கோவல்*
*வீரட்டங் கோகரணங் கோடிகாவு*
*முல்லைப் புறவ முருகன்பூண்டி*
*முழையூர் பழையாறை சத்திமுற்றங்*
*கல்விற் றிகழ்சீரார் காளத்தியுங்*
*கைலாய நாதனையே காணலாமே.* (1)

## சுந்தரமூர்த்தி நாயனார், ஊர்த்தொகை.

பண் - பழம்பஞ்சுரம் (ஏழாந் திருமுறை)

கோயிற்றிறம்.

**திருச்சிற்றம்பலம்.**

*தாங்கூர் பிணிநின் னடியார்மேல வகல வருளாயே*
*வேங்கூ ருறைவாய்விளமர் நகராய் விடையார் கொடியானே*
*நாங்கூ ருறைவாய்* **தேங்கூர்நகராய்** *நல்லூர் நம்பானே*
*பாங்கூர் பலிதேர் பரனே பரமா பழனப் பதியானே.* (6)

---

## சுந்தரமூர்த்தி நாயனார், திருநாட்டுத்தொகை.

பண் - இந்தளம் (ஏழாந் திருமுறை)

**திருச்சிற்றம்பலம்.**

**தேங்கூரு** *ந்திருச்சிற்றம்பலஞ் சிராப்பள்ளி*
*பாங்கூரெங்கள் பிரானுறையுங் கடம்பந்துறை*
*பூங்கூரும் பரமன் பரஞ்சோதி பயிலுமூர்*
*நாங்கூர் நாட்டு நாங்கூர் நறையூர் நாட்டு நறையூரே.* (4)

---

## திருவாரூர், திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம் (ஆறாந் திருமுறை)

**திருச்சிற்றம்பலம்**

*கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை*
*கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் றாகி*
*யுருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்*
*வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரான்*
*மருவாகி நின்னடியே மறவே னம்மான்*
*மறித்தொருகாற் பிறப்புண்டேன் மறவாவண்ணந்*
*திருவாரூர் மணவாளா* **திருத்தேங்கூரா**
*செம்பொனே கம்பனே திகைத்திட்டேனே.* (6)

# பெரியபுராணம் (திருத்தொண்டர் புராணம்)

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம்.

**திருச்சிற்றம்பலம்.**

நம்பர்மகிழ் திருவாரூர் வணங்கிப்போந்து நலங்கொடிருக்
காறாயி னண்ணி யேத்திப்
பைம்புனன் மென் பணைத்தேவூ ரணைந்து போற்றிப் பரமர்திரு
நெல்லிக்காப் பணிந்து பாடி
யும்பர்பிரான் கைச் சினமும் பரவித் தேங்கூ ரோங்குபுகழ்த்
திருக்கொள்ளிக் காடும் போற்றிச்
செம்பொன்மதிட் கோட்டூரும் வணங்கி யேத்தித் திருமலிவெண்
டுறைதொழுவான் சென்று சேர்ந்தார் (574)

113987

பாரதி பிரஸ், மன்னார்குடி.

8B
8-21